பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 22 திங்கட்கிழமை 09.10.2023 அதிர்வு 70

## வடக்கு - கிழக்கில் 20 இல் ஹர்த்தால்

- எஸ்.நிதர்ஷன் -

எதிர்வரும் 20ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தாலை நடத்துவதற்குத் தமிழ்க் கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன.

03

# "நீதித்துறை மீது கை வைக்காதே!"

## உயர்நீதிமன்றம் முன்பாக சட்டத்தரணிகள்

## இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்




- சண்முகம் தவசீலன் -

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும், நீதித்துறையின் கௌரவத்தையும் சுயாதீனத் தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தியும் நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் இணைந்து கொழும்பு உயர் நீதிமன்றம் முன்பாக இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று காலை 9.30 மணியளவில் உயர்நீதிமன்றம் முன்பாக ஒன்றுகூடிய சட்டத்தரணிகள் "நீதித்துறை மீது கை வைக்காதே" என்ற தொனிப்பொருளில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல மாகாணங்களையும் சேர்ந்த பெருமளவிலான சட்டத்தரணிகளும், ஜனாதிபதி சட்டத்தரணிகளும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.







உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# வடமராட்சியில் பொலிஸார் சூடு; சந்தேகநபர் காயங்களுடன் கைது

## பருத்தித்துறை வைத்தியசாலையில் பாதுகாப்புடன் சிகிச்சை



- எஸ்.நிதர்ஷன் -

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபரைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இன்று கைது செய்தனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி – அல்வாய் பகுதியைச் சேர்ந்த நபரே துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் திருட்டு, வழிப்பறி, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிவான் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அந்நிலையில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குற்றச் செயலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அவரைப் பொலிஸார் தேடி வந்தனர்.

அதன்போது அவர் அல்வாய் பகுதியில் பதுங்கியிருக்கின்றார் என்று கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தபோது, அவரது உறவினர்களான பெண்கள் உள்ளிட்டவர்கள், பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர்.

அதனால் அங்கிருந்து திரும்பிய பொலிஸார் மீண்டும் இன்று மேலதிக பொலிஸாருடன் அப்பகுதிக்குச் சென்று சந்தேகநபரைக் கைது செய்ய முற்பட்ட வேளை அவரின் உறவினர்கள் அவ்விடத்தில் கூடி பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர்.

அவ்வேளை சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளை அவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதன் பின்னர் காயங்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரைச் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்தனர். அங்கு அவர் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# வீடு உடைத்து திருட்டு; 3 இளைஞர்கள் கைது!

## களவாடப்பட்ட பொருட்களும் மீட்பு; மேலும் இருவரைத் தேட வலைவீச்சு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ். உரும்பிராய் பகுதியில் வீடு உடைத்துத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் இருவரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றின் உரிமையாளர் குடும்பத்துடன், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார்.

ஒரு சில நாட்கள் மட்டக்களப்பில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த அந்தக் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பிய வேளை வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டில் இருந்த மின் மோட்டார், தொலைக்காட்டி பெட்டி, மடிக்கணினி கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளமையை அவதானித்தனர்.

அது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று சுன்னாகம் மற்றும் உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வீட்டில் இருந்து திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டன. அவற்றின் பெறுமதி 7 இலட்சம் ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஐ.தே.க. பதவியில் விரைவில் மாற்றம்

## பொதுச்செயலாளராக ரவியை நியமிக்கப் பலரும் இணக்கம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகளில் எதிர்வரும் நாட்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது நிதி அமைச்சராகப் பதவி வகித்த ரவி கருணாநாயக்கவைக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

கட்சியைப் பலமான நிலைக்குக் கொண்டுவரக் கூடிய நபர் ரவி கருணாநாயக்க எனும் கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடையே நிலவுவதன் காரணமாக இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில், ரவி கருணாநாயக்கவை கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கும் தீர்மானத்துக்குச் சிலர் மாத்திரம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு நிறைவில் மேலும் சில பதவி நிலை மாற்றங்கள் இடம்பெறவுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# யாழில் வாள்வெட்டு இளைஞர் படுகாயம்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ். நல்லூர், அரசடிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் வெள்ளை நிற காரில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டு விட்டுத் தப்பிச் சென்றது.

கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே காயமடைந்தார்.

அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்னவின்
# பதவிக் காலம் மேலும் நீடிப்பு?



இலங்கையின் தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரம ரத்னவின் பதவிக் காலம் மேலும் நீடிக் கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகி றது.

பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன பொலிஸ் சேவையில் இருந்து 2023 மார்ச் 26 இல் ஓய்வு பெறுவார் என முதலில் கூறப்பட்டிருந்த போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏப்ரல் 6ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அவரது பதவிக் காலத்தை ஜூன் 26 ஆம் திகதி வரை மூன்று மாதங்களுக்கு நீடித்தார்.

பின்னர் ஜூலை 9ஆம் திகதி அவருக்கு மேலும் 3 மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதா அல்லது தற்போதைய பொலிஸ்மா அதிபர் விக்கிரம ரத்னவுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்குவதா என்பது தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# முல்லை. நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக உயர் நீதிமன்றம் முன்பாகத் திரண்ட சட்டத்தரணிகள்!




**வடக்கு கிழக்கில் 20இல்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தைக் கண்டித்தும், நீதி கோரியும் ஹர்த்தால் அனுஷ்டிப்பது தொடர்பான கூட்டம் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இன்று மாலை நடைபெற்றது.

அரசியல் கட்சிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலிலேயே எதிர்வரும் 20 ஆம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்கத் தீர்மானித்துள்ளதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் தார்.

## முல்லைத்தீவில் கறுப்புத் துணியால் வாயைக் கட்டியவாறு

# நீதிபதிக்கு நீதி வேண்டி இளையோர் போராட்டம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரி கண்டனப் போராட்டம் இன்று முல்லைத் தீவில் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்க ளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இன்று காலை 10.15 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கறுப்புத் துணியால் வாயைக் கட்டியவாறு அமைதியாக கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கன கேஸ்வரனிடம் நீதி அமைச்சின் செய லாளருக்குக் கையளிக்க மகஜர் கைய ளிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "நீதிப திக்காக நீதி கேட்கும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு என்ன நீதியோ?", "நீதியின் கழுத்தில் தூக்குக் கயிறு நீரத் துப் போனதா நியாயத்தின் உணர்வு?", "நீதி தேவதையே நீயும் பெண்தானே நீதி கிடைக்காத பெண்களுள் நீயும் ஒருத்தியோ?", "தொடர்ந்து நடந்தேறும் நீதி புரள்வுகளுக்கு என்ன தீர்ப்பு நீதி அமைச்சே?" போன்ற பல்வேறு வாசகங் களையுடைய பதாதைகளைத் தாங்கி நின்றனர். இந்தப் போராட்டத்தில் முன் னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மதகுருமார், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீஸ்வரன், சமூகச் செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ் செழியன் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.















# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு ஆய்வு மாநாடு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இன்று (09) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கல்விசார் ஆய்வு மாநாடு ஆரம்பமாகியது.

கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர் பொன். இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாநாட்டின் தொடக்க நிகழ்வு பொது அரங்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வு மாநாட்டு சிறப்புரையை ஆற்றினார். வெற்றி பெறுவதில் மனப்பாங்கின் வகிபாகம் என்ற பொருளில் அவரது உரை அமைந்தது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரையையும் விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அரங்க அழைப்பாளர் உரையையும் வழங்கினர்.

ஆய்வுக் கட்டுரை அளிக்கைகளின் முதல் அமர்வு கலாசாலைக்கென காணியை வழங்கிய சேர் பொன். இராமநாதன் அரங்காக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் தலைமையில் நடைபெற்றது.

கோப்பாயில் ஆசிரிய கலாசாலையை நிறுவதற்கு அடித்தளமிட்ட காரைநகர் ச. அருணாகலம் உபாத்தியாயர் பெயரில் இரண்டாவது அரங்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் அருணாசலம் உபாத்தியாயர் குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக, தேசிய கல்விநிறுவக, கலாசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு மாநாட்டு மலரும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணில் - ராஜபக்ஷ திட்டம்

அதிகாரம் என்பது பெரும் போதை. அதைத் தக்க வைக்கவும், கைப்பற்றவும் அரசியல்வாதிகள் எந்த எல்லை வரையும் போவார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்தமை முதல் அதற்காகத்தான் சிங்களத் தரப்பின் தலைவர்கள் பேரினவாதத்தையும், மதவாதத்தையும், மொழிவாதத்தையும் கிளப்பி நாட்டைச் சீரழித்து வருகிறார்கள். மலையகத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்தமையோடு வெளிப்பட ஆரம்பித்த இந்த பேரினவாதம் இன்று வரை பெரும் கொடூரமாய் - வீரியமாய் - தொடர்கின்றது என்றால் அதற்குக் காரணம் அதிகார போதைதான். அதன் மீதான கண்தான்.

இப்போது அதிகாரத்தில் இருக்கும் ரணில் - ராஜபக்ஷ தரப்பினர் அதனைத் தக்க வைப்பதற்காக புதிய யுக்தி ஒன்றைக் கையில் எடுத்திருக்கின்றனர் என ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க எச்சரித்திருக்கின்றார்.

நேரடி மக்கள் ஆதரவு இல்லாமல் பின் கதவால் நாடாளுமன்றுக்கும், அதன் மூலம் அதே பின் கதவால் ஜனாதிபதி பதவிக்கும் வந்தவர் ரணில். எப்படியும் அடுத்த ஆண்டு ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தலை நாடு சந்திக்க வேண்டும். தவிர்க்க முடியாத கட்டாயம் அது. அந்தத் தேர்தலை தள்ளிப் போட்டு அதிகாரத்தில் தொடர ரணில் - ராஜபக்ஷ தரப்பு முயன்றால் நாட்டில் பெரும் அரசியல் பிரளயமே ஏற்படும்.

அத்தகைய தேர்தலில் தமது வெற்றிவாய்ப்புக் குன்றி வரும் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ள அத்தரப்பினர், அதிகாரத்தில் தொடர புதிய திட்டம் ஒன்றை வகுக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதிகாரம் கை மாறிவிடும். தாங்கள் அதிகாரத்தை இழந்து அரசியல் அநாதைகளாகும் நிலைமை வரும். புதிய தரப்பு ஒன்றிடம் நிறைவேற்றதிகாரம் கைமாறும். அத்தகைய சூழலில் இப்போதைய நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடக்கவும் வாய்ப்புண்டு. அது அத்தரப்புக்கு மேலும் பின்னடைவைத் தரும்.

இந்த இரண்டையும் தவிர்ப்பதற்காக ரணிலின் தற்போதைய பதவிக்காலம் முடியும்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையும் முற்றாக ஒழித்து விட்டால் என்ன என்று அதரப்பு யோசிக்கின்றதாம். அப்படி ஒழித்த பின்னரும் இருக்கும் நாடாளுமன்றத்தில் தங்களுக்குள்ள பெரும்பான்மையைப் பேணி அதிகாரத்தில் தொடர முடியும் என்பது அவர்களின் நப்பாசை.

நாட்டின் சீர்கேட்டுக்கு, தனிநபருக்கு நிறைவேற்றதிகாரத்தை ஒப்படைத்த ஆட்சி முறைமைத் தவறே பிரதான காரணம் என்ற கருத்தியல் பரவி வருவதால் ரணில் - ராஜபக்ஷ தரப்பினர் அத்தகைய திட்டமொன்றை முன்னெடுக்கும் போது அதை எதிர்க்க முடியாது என்ற இக்கட்டு பிரதான எதிர்க்கட்சிகளுக்கு உண்டு.

அடுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு கண் வைத்து இருக்கிறோம், அதனால் அந்த முறைமையை ஒழிக்கச் சம்மதிக்க மாட்டோம் என்று அத்தகைய திட்டத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பகிரங்கமாகப் பிரசாரம் செய்ய முடியாது.

எது, எப்படி என்றாலும் - என்ன காரணத்துக்காகவும் - இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிந்தால் நல்லதுதான்.

## இரத்தம் வழங்குபவர்களது வீதம் அண்மைக் காலமாகக் குறைவு!

### தெல்லிப்பழை இரத்தவங்கி வைத்தியர் ஜெயபாஸ்கரன் கவலை



யாழ். மாவட்டத்தில் அண்மைய நாள்களில் இரத்த தானத்தை ஒழுங்கு செய்யும் ஒருங்கிணைப்பாளர்களும் தாமாக முன் வந்து இரத்ததானம் வழங்குபவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து செல்கிறது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர் ஜெய பாஸ்கரன் இவ்வாறு கவலை தெரிவித்தார் .

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு-

வெளிநாடு செல்லும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பும் கூட இதற்குக் காரணமாக இருக்கலாம். அதேநேரம் நாட்டில் பொருளாதர நிலைமையும் இன்னொரு காரணமாக இருக்கலாம்.

தேக ஆரோக்கியமாக இருப்போர், நீங்கள் எந்த நேரமும் நான்கு மாதத்துக்கு ஒரு தடவை இரத்தானத்தை வழங்கிச் செல்ல முடியும். நாம் அனைத்துப் பரிசோதனைகளையும் மேற்கொண்ட பின்னரே உங்களிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்கின்றோம்.

ஆரோக்கியமானவர்களிடம் இருந்து மாத்திரமே இரத்தத்தை பெறுகின்றோம். இரத்ததானம் கொடுப்பதன் மூலம் உங்களுடைய ஆரோக்கியமானது வருடத்துக்கு ஒரு தடவையாவது பரிசோதிக்கப்படுகின்றது .

அதே நேரம் இரத்தம் கொடுப்பதன் மூலம் ஏற்படும் உடல் ஆரோக்கியம் இதன் மூலம் உறுதி செய்து கொள்ளப்படுகின்றது.

இரத்தம் வழங்குவது அளப்பரிய சேவையாக இருக்கும்.-என்றார்.



## வாழ்வாதார உதவியாக பசுக்கள் வழங்கப்பட்டன

(பழுவூரான்)

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையால் ஆலயத்துக்கு நேர்த்திக் கடனாக கிடைக்கப் பெற்ற பசுக்கள் வறுமையான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கல் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக போரதீவுப்பற்று பிரதேச செயலகம் வெல்லாவெளி, மண்முனை மேற்கு பிரதேச செயலகம் வவுணதீவு, ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகம் செங்கலடி ஆகியவற்றிலில் இருந்து பிரதேச செயலாளர் ஊடாக தெரிவு செய்யப்பட்ட தலா இரண்டு பேர் வீதம் மொத்தமாக ஆறு பயனாளிகளுக்கு பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமுன்றலில் இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வண்ணக்கர் இ. மேகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக் குருக்கள், செயலாளர் வண்ணக்கர் சி.கங்காதரன், பொருளாளர் வண்ணக்கர் ச.கோகுலகிருஸ்ணன், தேசமகா சபை உறுப்பினர்கள், குடிசார்ந்த தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சீரற்ற வானிலையால் 71 ஆயிரம் பேர் பாதிப்பு!

சீரற்ற வானிலையால் நாட்டில் 18 ஆயிரத்து 898 குடும்பங்களைச் சேர்ந்த 71அயிரத்து 320 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, மாத்தறை, காலி, நுவரெலியா, புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன என்று மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 555 குடும்பங்களைச் சேர்ந்த 1,910 பேர் 16 பாதுகாப்பான இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அனர்த்தம் காரணமாக 12 வீடுகள் முழுமையாகவும், 1,004 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட் டங்களுக்கு மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பல பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அந்த நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, நாகொடை, யக்கலமுல்ல, கடவத சதர, இமதுவுடன் களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, வலல்லாவிட்ட, மத்துகம மற்றும் மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர, அக்குரஸ்ஸ, ஹக்மன ஆகிய பிரதேசங்களுக்கு மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மோசமான வானிலையை கருத்தில் கொண்டு காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளை சில தினங்களுக்கு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# புகை சோதனையில் விலகவுள்ளனர் தனியார் பேருந்து உரிமையாளர்கள்!

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அனைத்து தனியார் பேருந்துகளும் புகை சோதனையில் இருந்து விலகவுள்ளன என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புகைப் பரிசோதனைக்கான நடைமுறை வேலைத்திட்டம் இல்லாத நிலையிலேயே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும்தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

தற்போது இந்த புகைப் பரிசோதனைக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் புகைப் பரிசோதனை நடைமுறையை ஜனவரி முதல் கைவிடுவதற்குச் சங்கமாக முடிவெடுத்துள்ளோம்.

எரிபொருளின் தரம் தொடர்பில் சிக்கல் உள்ளது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் எனப் பேசப்பட்டு வருகிறது. என்றபோதிலும் டீசலின் தரத்தில் கடும் சிக்கல் உள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு புகைப் பரிசோதனை செய்யப்படுவதில்லை. அரச வாகனங்களுக்கும் புகைப் பரிசோதனை இல்லை. எனினும் தனியார் பேருந்துகளும் ஒரே சேவையை வழங்குகிறார்கள். ஒரே கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

எனவே, வரும் ஜனவரி மாதம் முதல் எங்கள் பேருந்துகளை புகைப் பரிசோதனையில் இருந்து நீக்குமாறு போக்குவரத்து அமைச்சகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளோம்.– என்றார்.





# பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசிய அரச சார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வு அமைப்பின் தலைவர் எஸ்.எம்.லாபீர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன்போது உயர்தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்ற மாணவர்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள் 200 பேர் பெறுமதி மிக்க நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், எம்.எஸ்.ஸஹுதுல் நஜீம், எஸ்.எம்.எஸ்.எம்.உமர் மௌலானா, எஸ்.உதயக்குமார் உள்ளிட்ட கல்வியலாளர்கள், துறைசார் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# இந்து சமுத்திர எல்லை நாடுகளின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமை பொறுப்பை நாளை மறுதினம் 11 ஆம் திகதி இலங்கை ஏற்கவுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

1997 இல் நிறுவப்பட்ட இந்தியப் பெருங்கடல் ரிம் அசோசியேசன் ஆனது இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள அரசுகளுக்கு இடையேயான அமைப்பாகும்.

தற்போதைய தலைவராக பங்களாதேஷின் வெளியுறவு அமைச்சர் ஏ.கே. அப்துல் மொமன், பதவி வகிக்கும் நிலையில் அடுத்து வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி, சபையின் தலைவராக இருப்பார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.



# நாவிதன்வெளியில் ஆசிரியர் தின விழா!

சம்மாந்துறை வலய நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய சர்வ தேச ஆசிரியர் தின விழா அதிபர் திருமதி. நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாகப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலய உதவிக் கல்விப் பணிப்பாள வி.ரி.சகாதேவராஜா மற்றும் அதிபர், ஆசிரியர்கள் மாலை அணி வித்து பான்ட் வாத்தியம் சகிதம் வர வேற்கப்பட்டனர்.

பின்பு மண்டபத்தில் ஆசிரியர் தின விழா பிரதி அதிபர் பி.ஜெகதீச னின் வரவேற்புரையுடன் இடம்பெற் றது.

நாவிதன்வெளிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளனும் நிகழ் வில் கலந்து கொண்டார்.

மாணவர்களது கலை நிகழ்வு, ஆசிரி யர் கௌரவிப்பு என்பனவும் இடம்பெற் றன.





# வாசிப்பு மாத நிகழ்வுகள்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் வரணிப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதம் மற்றும் சிறுவர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை வரணி பொது நூலக மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது வரணி, இயற்றாலை கலைவாணி முன்பள்ளி மாணவர்கள் வரவழைக்கப்பட்டு “மகிழ்வான நூலகம்” எனும் கருப்பொருளில் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

# வடக்கையும் தெற்கையும் இணைத்து நடக்கும் பாலகுமாருக்கு வரவேற்பு

(அ.அஸ்வர்)

தெற்கையும் வடக்கையும் இணைத்து உலக சாதனை படைக்க 3089 கிலோ மீற்றர் தூரம் நடை பயணம் வரும் மரதன் ஓட்ட சாம்பியன் எஸ். பாலகுமாருக்கு அம்பாறையில் மக்கள் ஆதரவு வழங்கினர்.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவின் பணிப்புரைக்கு அமைய நேற்று (08) அரச அதிகாரிகள் இவரைச் சந்தித்து அவரது தேவைகள் பற்றி கேட்டறிந்தனர்.

அம்பாறை நாமல்தலாவ விகாரை மற்றும் ஜப்பானிய சமாதான கேந்திரம் ஆகியவற்றுக்குச் சென்று சியம்பலண்தடுவ செல்லும் வழியில் அம்பாறை மாவட்டத்தில் அவரது பாதுகாப்பு மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது அம்பாறை பிரதேச அனைத்து கிராம சேவை உத்தியோகத்தர்களும் அவருக்கு தேவையான ஏற்பாடுகளை வழங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு வழிபாடுகளுக்காக வருகை தந்த பக்தர் களிடமிருந்தும் அவருக்கு அமோக வரவேற்பு கிடைத்தது.

பல நாள்களாகத் தேசியக் கொடியை ஏந்திய வண் ணம் நடை பவனி செல்லும் தனக்கு அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான சிறப்பான அரச ஆதரவைப் பெற்றுத் தந்தமைக்காக மாவட்டச் செயலாளருக்கும் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் பாலகுமார் நன்றிகளைத் தெரிவித்தார்.



# ஏறாவூர்பற்றுக்கு நிரந்தரமாக திடீர் மரண விசாரணை அதிகாரி



(பழுவூரான்)

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கான நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரியாக ஏறாவூர் நஸீர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டில் இருந்து ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கான மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட் எம்.எஸ். எம்.நஸீர், மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் கடமையாற்றி வந்தார்.

இந்த நிலையில் இவருக்குத் தற்போது நிரந்தர நியமனம் வழைங்கப்பட்டுள்ளது.

இதற்கான சத்தியப் பிரமான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (06) திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்ற நீதிபதி கௌரவ ஏ.பீட்டர் போல் முன்னிலையில் நடைபெற்றது.

# சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

(த.சுபேசன்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கமானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தவுள்ள சைவப் புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டங்களுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை இல. 610, காங்கேசன்துறை, இணுவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பெறல் உள்ளிட்ட மேலதிக தகவல்களுக்கு 777197067 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் தெரிவித்துள்ளார்.



# நுணாவில் சிறுவர் பூங்காவை மக்களின் பாவனைக்கு விடுக!

## நகரசபை முன்னாள் உறுப்பினர்கள் கோரிக்கை

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான நுணாவிலில் உள்ள சிறுவர் பூங்காவை மக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து விடுமாறு நகரசபை முன்னாள் உறுப்பினர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே சாவகச்சேரி நகரசபைச் செயலாளரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக நகரசபை முன்னாள் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில்–

சாவகச்சேரி நகரசபை மக்களுடைய வரிப்பணத்தில் காணி கொள்வனவு செய்து சிறிது சிறிதாக சிறுவர் பூங்காவை அமைத்து வருகிறது.

தற்போதைய பெறுமதியில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணம் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டு சிறுவர் பூங்கா காணியில் வைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்து ஒரு வருடம் கடக்கின்ற போதிலும் இன்றுவரை அது பயன்பாடு இன்றிக் காணப்படுகிறது.

அதன் மேல் பனை மரம் விழுந்து ஒரு பகுதி சேதமடைந்து உள்ளது. எனவே அதனைப் பயனுள்ளதாக மாற்றும் விதமாக சிறுவர் பூங்காவை மாலை வேளையில் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் சிறுவர் பூங்கா பயன்பாடு இன்றிக் காணப்படுவதால் நகரசபை அந்தக் காணியைக் கடந்த கால சபைத் தீர்மானங்களை மீறி தன்னிச்சையாக முடிவெடுத்து வேறு அரச திணைக்களங்களுக்கு பிரித்துக் கொடுக்கும் நிலையும் காணப்படுகிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக நகரசபை சிறுவர் பூங்காவை உடனடியாக திறந்துவிட வேண்டும்.– என்றனர்.



# கைவிடப்பட்ட நிலையில் ரி-56 ரக துப்பாக்கி மீட்பு!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தனங்களப்பு–அறுகுவெளிப் பகுதியில் உள்ள காணி ஒன்றில் துப்பாக்கி மற்றும் எறிகணை ஆகியன காணப்படுவதாக நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அப்பகுதி ஊடாக கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்ற நபரொருவரே வெடிபொருள்களை அடையாளம் கண்டு கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதன்போது கைவிடப்பட்ட நிலையில் ரி–56ரக துப்பாக்கி ஒன்றும், எறிகணை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

வெடிபொருள்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்தனர்.



# ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பெரும்போக விதைப்பு ஆரம்பம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுவாமி விஜயானந்த சிறுவர் இல்லத்துக்குச் சொந்தமான வயல் காணியில் பெரும்போக விதைப்பு வேலைகள் உத்தியோக பூர்வமாகச் சுப வேளையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.



நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர், லாகுகல பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோஸ்தர்கள், பிரதேசவாசிகள், சமயப் பெரியார்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர்.



## ரி-56 தானியங்கி துப்பாக்கி மரப் பொந்திலிருந்து மீட்பு!

வெலிகந்த, சிறிபுர, ஹூங்கமலா ஓயா வனப் பகுதியில் பாரிய மரமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 தானியங்கி துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வு அதிகாரி ஒருவருக்கு கிடைத்த தகவலின்படி, மரத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கியைப் பதுக்கி வைத்தவர்கள் தொடர்பில் இதுவரை பொலிஸாருக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்

## நீர் மூழ்கிப் பந்தயப் போட்டி: ஒருவர் நீருக்குள் உயிரிழப்பு!

பந்தய அடிப்படையில் நீருக்கடியில் போட்டி நடத்தியவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (08) இடம்பெற்றுள்ளது.

பாதுக்க துன்னான பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாதுக்க பகுதியில் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட குழுவினர் குளிப்பதற்காக வென்றுள்ளனர்.

இந்த நிலையில், நீருக்குள் அதிக நேரம் மூச்சை அடக்கக் கூடிய நபரை தெரிவு செய்வதற்கான போட்டி இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட குறித்த நபர் நீருக்கு அடியில் சென்று அதிக நேரம் இருந்துள்ளார்.

நீண்ட நேரம் நீருக்கு மேல் வராத நிலையில் அவர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு பாதுக்க மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில், அவர் ஏற்கனவே இருந்துள்ளார் என்று வைத்தியசாலை தெரிவித்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி தலைமையில் கலைஞர்கள் கௌரவிப்பு!

## 38 ஆவது கலாபூஷணம் விருது வழங்கும் விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கையில் கலைத்துறைக்கு உன்னதமான அபிமானத்துடன் சேவை யாற்றித் தலைமுறைகள் கடந்து கலைகளால் தேசத்தின் எதிர்காலத்தை உலகுக்குக் கொண்டு சென்ற கலைஞர் களுக்கான மகுடம் சூட்டும் 38 ஆவது கலாபூஷணம் அரச விருது விழா – 2023 நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.




இதில் 2022ஆம் ஆண்டு கலாபூஷ ணம் விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் கலைஞர்களான ஏ.சி. ராஹில் – நிந்தவூர் (இலக்கியம்), எம். எம்.ஜமால்தீன் – ஏறாவூர் (இலக்கியம்), ஹாஜா அலாவுதீன் – பாலாவி (இலக்கியம்), எம்.கே.எம்.அஸ்வர் – மொரட்டுவ (ஊடகம்), எஸ். தஸ்தகீர் – கல்முனை (இலக்கியம்), யூ.எல். கலீல் ரஹ்மான் – சம்மாந்துறை (ஊடகம்), ஏ.யூ.எல். அப்ரா உம்மா – கண்டி (இலக்கியம்), ஏ. இஸ்ஸதீன் – சாய்ந்தமருது (நாட்டுப்புற கலைகள் – கோலாட்டம்), இஸட். ஏ. எம். ஹனீபா – கண்டி (இலக்கியம்), ஏ.எல்.ஏ. சுப்ஹான் அக்பர் – மாவடிப்பள்ளி (பாடல்) ஆகிய 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் பணிப்பாளர் வை.அனிருத்தனன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைசல், கிறிஸ்தவ மத அலு வல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சதுரி பிந்து, கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் யசிந்தா குணவர்தன, புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்தி ரண உட்பட இந்த முறை கலாபூஷ ணம் விருதுக்காக இலங்கையின் நாலாபுறத்திலிருந்து தெரிவு செய்யப்பட் டுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் கலை ஞர்கள் பலரும் கலந்து கொள்வர்.

# கதிரியல் புற்றுநோய் சிகிச்சைக்கு சாய்ந்தமருதின் முதல் இளமாணி

(எஸ்.அஷ்ரப்கான்)



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக பொதுப்பட்டம ளிப்பு விழாவானது கடந்த 4 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் தலைமையில் நடை பெற்றது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் என். கே.செரோன் அனாஸ் கதிரியல் புற்றுநோய் சிகிச்சையாளராக தனது இளமாணி பட்டத்தை பெற்றார்.

இத்துறையில் கிழக்கு மாகாணத்தில் இளம் வயதில் இளமாணி பட்டத்தை நிறைவு செய்த முதல் நபராகவும் மேலும் சாய்ந்தமருதின் முதலாவது கதிரியல் புற்றுநோய் சிகிச்சையாராகவும் இவர் உள்ளார்.

தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்த மருது அல்-ஜலால் வித்தியாலயத் திலும் உயர்தர கல்வியை உயிரியல் விஞ்ஞான பிரிவில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்று 2018 ஆம் ஆண்டு ஜெனரல் சேர் ஜோன் கொத்த லாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியி ருந்தார்.

# கார் மோதி ஆசிரியை பலி; சாரதி பொலிஸாரால் கைது!

கெஸ்பேவ ஹல்பிட்ட பிரதேசத்தில் பாதசாரி கடவையில் சென்று கொண்டி ருந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவரை மோதிவிட்டு தப்பிச் சென்ற காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இந்தச் சம்பவத்தில் குறித்த ஆசி ரியை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இது தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் காரின் பதிவு உரிமையாளரை அடையாளம் கண்ட போது அந்தக் கார் வாடகை அடிப்படை யில் கொடுக்கப்பட்டிருந்தமை தெரியவந் துள்ளது.

இதனையடுத்து அந்தக் காரை வாடகைக்குப் பெற்ற வர்த்தகரைப் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து விசாரணை நடத்தியதில், அவர் விபத்து ஏற்படுத்தியதை ஒப்புக்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# அம்பாறை, தீகவாபிய ஆஸ்பத்திரிக்கு கிழக்கு சுகாதாரப் பணிப்பாளர் குழு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் மெலிண்டன் கொஸ்தா தீகவாபிய பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்ட மற்றும் ஏனைய செயற்பாடுகளின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களையும் ஏனைய புனர்நிர்மாண வேலைகளையும் பார்வையிட்டதுடன் வேலை திட்டங்கள் தொடர்பாகத் தனது திருப்தியை வெளியிட்டிருந்தார்.

இதன்போது இந்த வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி மற்றும் ஏனைய வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களையும் சந்தித்துக் குறை நிறைகளை கேட்டு அறிந்தார்.

இந்த விஜயத்தின் போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம் சீ எம் மாஹீரும் கலந்து கொண்டார்.



# அதிகாலையில் யானை: காரைதீவில் அட்டகாசம்!

( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தினம் தினம் அதிகரித்து வருகிறது.

அறுவடையை அடுத்து நேற்று (9) அதிகாலை புகுந்த தனியன் யானை காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையைத் துவம்சம் செய்தது.

சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சா. வேல்முருகுவின் களஞ்சிய சாலையிலுள்ள நெல் மூடைகளை யானை பதம் பார்த்தது.

இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன. தென்னை, வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன.


இவ்வாறு தினமும் யானையின் அட்டகாசம் தொடர்ந்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணவனைக் காணவில்லை: மனைவி பொலிஸில் முறைப்பாடு!

வவுனியா சிதம்பரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகனூர் கிராமத்தைச் சேர்ந்த அன்டன் ஜொன்சன் என்பவரை கடந்த 04 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என்று அவரின் மனைவி சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் இன்று வரை வீடு திரும்பவில்லை என்றும் வீட்டிலிருந்து அவர் வெளியேறுகையில் நீல நிறம் சரம் மற்றும் ரோஸ் கலர் சேட் அணிந்திருந்தார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவரை கண்டவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.





அல்லது 0776289460 (மகன்), 0774136383 (மனைவி), 0762477411 (மகள்) ஆகிய இலக்கங்களுக்குத் தகவல் வழங்கி உதவுமாறு தெரிவித்துள்ளனர்.

# நசுக்கப்பட்ட மக்கள் குரல்...!

• நவீனன்




**1987** ஒக்ரோபர் 10ஆம் திகதி அதிகாலை வேளை, தமிழர் பூமியை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம், தமிழர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ஊடகங்கள் மீதான தனது எதேச்சாதிகார நடவடிக்கையை மேற்கொண்ட கரி நாளாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஜூலை 29 இல் கைச்சாத்தானதின் பின்னர், ஈழத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்தை முடக்க உருவாக்கும் வகையில், நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி நிலையங்களின் தகர்ப்பு - அழிப்பு நிகழ்ந்தது.

## 1987 ஒக்ரோபர் 10 அமைதியின் அஸ்தமனம்

## நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி தகர்ப்பு!

1987 ஐப்பசி 10 ஆம் நாள் காலை அமைதிப் படையினர் யாழ்ப்பாண நகரிலிருந்த இரு தமிழ் தினசரிப் பத்திரிகைகளான ஈழமுரசு, முரசொலி அலுவலகங்களுக்குள் புகுந்து, பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்துக்குள் வெடிகுண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர்.

### இந்திய அமைதிப் படை போர்

இந்தியப் அமைதிப் படை 1987 ஒக்ரோபர் 10 ஆம் நாள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரைப் பிரகடனம் செய்து தமிழருக்கு எதிரான போரை நடத்தியது. போரில் இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது தாக்குதல்களை நடத்தியது.

அத்துடன் ஈழமுரசு, முரசொலி, நிதர்சனம் போன்ற ஊடகங்களைத் தகர்த்தொழித்து தமிழர்கள் மீதான போர் பற்றிய செய்திகள் வெளியே வராமல் பார்த்துக் கொண்டது இந்திய அமைதிப் படை.

ஊடகம் என்பது மக்கள் ஜனநாயகத்தின் முக்கிய தூண். மக்களுக்கும், அரசுக்கும் உள்ள இடைவெளியில் கண்ணாடி போல நின்று அனைத்துச் செய்திகளையும் உலகுக்குச் சொல்லும் மிகப்பெரிய சாதனம் இந்த ஊடகங்களே.

இந்தியா என்கிற மிகப்பெரிய ஜனநாயக நாடு, உலகின் நான்காம் இராணுவத்தை கொண்ட நாடு, மக்கள் தொகையில் இரண்டாம் இடம் கொண்டுள்ள நாடு. அத்தகைய நாட்டில் ஊடகம் எத்தகைய செயல்பாடுகள் செய்ய வேண்டுமோ, அதற்கு சற்றும் தொடர்பில்லாத செயல்பாடுகளை இந்தியா ஈழத்தில் செய்தது.

ஈழத்தில் ஊடகம் என்பது தமிழரின் நிலைப்பாட்டைப் பொறுத்தவரை உண்மைகளை முடக்கும் முகமானதாகவும், உண்மை நிலைக்கு மாறான பரப்புரைகளை நிகழ்த்துவோருக்குச் சுதந்திரமானதாகவுமே நீண்ட காலமாக இருக்கின்றது. உண்மைச் செய்திகளைத் திரட்டி வெளியிட மறுப்பதை அல்லது தடுப்பதை ஊடக முடக்கம் எனலாம். ஊடக முடக்கம் செய்யப்படும் போது ஊடகச் சுதந்திரமும் அந்த நாட்டில் அற்றுப் போய் விடுகின்றது என்பதும் உண்மையே.

### ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை

இந்திய அமைதிப் படைகளின் ஊடகப் போரை, இக்கோர நிகழ்வை சாட்சியப்படுத்தும் வகையில், ஈழமுரசு பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூல் வரலாற்றுச் சான்றாக விளங்குகிறது.

இந்திய அமைதிப் படைகளால் சிறைவைக்கப்பட்டிருந்த போது, எழுதிய எஸ்.எம். ஜியின் சிறைக்குறிப்புகள், தமிழ்நாட்டில் ஜூனியர் விகடன் இதழில் 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற தலைப்பில் தொடராக வெளியாகிப் பெரும் பரபரப்பானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவைத் தாய் நாடு என்றும், இலங்கையைச் சேய் நாடு என்றும் அழைத்து வந்த காலங்கள் இந்தியப் படையினரின் இப்படிப்பட்ட அநாகரியமான செயலால், இந்திய அரசின் சுயநல நோக்கத்துக்காக ஈழ மக்களைப் பல துன்பியலுக்கு உட்படுத்தியதை எம் தமிழ் இனத்தின் சிந்தனையில் இருந்து ஒரு போதும் அழித்து விட முடியாது என்பதே நிதர்சன உண்மையாகும் என்று எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதி காப்பதற்காகவும், ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவும் வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைந்தது. இந்த இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இச்சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிவாக ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை எனும் நூல் அமையப்பெற்றுள்ளது.

ஈழத்தில் தமிழர்களால் நடத்தப்படும் ஊடகங்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளாகி வருகின்றன. ஊடகவியலாளர்கள் கைது, காணாமல் போதல், கொலை செய்யப்படல் போன்றவை தொடர்கின்றன.

பல ஊடகவியலாளர்கள் கொலைச் செய்யப்பட்டும் உள்ளனர். கொலை செய்யப்பட்ட இலங்கையின் ஊடகவியலாளர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. இதனால் பல ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறி உள்ளனர்.

தாயகத்தில் உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு "ஊடகச் சுதந்திரம்" மறுக்கப்பட்டுள்ளதோடு, கொலை அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் இன்னமும் உள்ளன. உண்மை நிலைப்பாடுகளை மக்களுக்கு அறியத் தர முற்படும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கொலை அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகின்றனர்.

### முரசொலி பத்திரிகை தகர்ப்பு

முரசொலி ஆசிரிய தலையங்கங்கள் (இதய நாதம்), திலீபனின் உண்ணா விரதக் கோரிக்கைகளை வலியுறுத்தியதாகவும் மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியதாகவும் இருந்தன. திலீபனுக்கு ஏதாவது நடந்தால் இந்தியாவே பொறுப்பு என எழுதப்பட்ட தலையங்கம் மீது இந்தியத் தூதுவர் கொண்டிருந்த கோபம் கலந்த விசனத்தை முரசொலிப் பத்திரிகையின் ஸ்தாபகரும் முதன்மை ஆசிரியராகவுமிருந்த எஸ். திருச்செல்வம் எழுதிய கட்டுரை ஒன்றில் பதிவிட்டுள்ளார்.

1987 ஒக்ரோபர் 9 ஆம் திகதி இந்தி

**(14ஆம் பக்கம் பார்க்க)**

# நசுக்கப்பட்ட மக்கள் குரல்...!

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாவின் அன்றைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த கே.சி.பந்த், திடீரெனக் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, அமைச்சர் அத்துலத் முதலி உட்பட ஸ்ரீலங்காவின் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பை நிகழ்த்திவிட்டு அன்றிரவே இந்தியா திரும்பினார். அன்று நள்ளிரவை அண்மிக்கும் வேளையில் கொழும்பிலுள்ள ஆங்கிலப் பத்திரிகையொன்றின் ஆசிரியரான நண்பர் ஒருவர் முக்கியமான தகவலொன்றை தொலைபேசியூடாகத் தெரிவித்தார். மறுநாள் பத்தாம் திகதி வடக்கில் ஊரடங்கு பிறப்பிக்கப்படும். விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு இரத்தாகும், இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்துப் பிடிப்பதற்காக அல்லது கொலை செய்வதற்காக பொதுமக்களை வீடுகளிலிருந்து வெளியேற்றும் என்று அவர் தந்த தகவல் பிரத்தியேகமான ஒரு செய்தியாகத் தெரிந்தது. ஒக்ரோபர் 10ஆம் திகதி முரசொலியின் முன்பக்கத் தலைப்பு செய்தியாக இதனை வாசகர்கள் புரியும் வகையில் பூடகமாக எழுதியிருந்தேன் எனத் எஸ். திருச்செல்வம் இக்கட்டுரையில் விபரித்துள்ளார்.

முதல் நாளிரவு கொழும்புப் பத்திரிகை நண்பர் தந்த தகவல் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. ஆனால், அடுத்த சில நிமிடங்களில் முரசொலி அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது என்ற செய்தி என்னை வந்து சேர்ந்தது. எதுவாயிருந்தாலும் தாங்கிக் கொள்வதென்ற மனநிலையில் அலுவலகத்துக்குச் சென்றபோது மிகப்பெரிய கூட்டம் அங்கு நின்றது. மூன்றுமாடிக் கட்டடத்தின் கண்ணாடிகளும் தளபாடங்களும் ஸ்ரான்லி வீதியில் சிதறிக் கிடந்தன. நிலப் பகுதியில் அமைந்திருந்த அச்சகம் நிர்மூலமாகியிருந்தது. ஒரு சில ஊழியர்கள் மட்டும் வெளியில் அச்சத்துடன் நின்றனர். தொடர் வாகன அணியில் வந்த இந்திய இராணுவத்தினர் அங்கிருந்த அச்சகப் பிரிவு ஊழியர்களை வெளியேற்றிவிட்டு உள்நுழைந்து அச்சு இயந்திரங்களுக்குள் குண்டுகளை வைத்து தங்கள் கைங்கரியத்தை நிறைவேற்றியதை அவர்கள் கலங்கியவாறு தெரிவித்தனர்.

ஆல் இந்திய ரேடியோவின் மாநிலச் செய்தியும், டில்லிச் செய்தியும் இந்தக் குண்டுத் தாக்குதல் பற்றி ஒலிபரப்பிய செய்தி விநோதமானது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் முரசொலி, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளை இந்திய இராணுவம் இன்று காலை முடக்கியது என்று அந்தச்செய்தியறிக்கையில் சொல்லப்பட்டது.

குண்டால் தகர்ப்பது என்பதை இந்திய ஊடக மொழி நடையில் முடக்குவது என்று சொல்வது என்பதை அன்றுதான் நான் அறிந்து கொண்டேன். இராணுவம் பத்திரிகை நிறுவனங்களை தகர்த்ததை விட, அதனை மூடி மறைத்து 'முடக்கப்பட்டது' என்று செய்தி வழங்கிய இந்திய வானொலியின் ஊடக (சு)தந்திரமே எனக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது.

ஒக்ரோபர் 10 முதல் 21 ஆம் திகதி வரையான நாள்கள், கொழும்பில் 9 ஆம் திகதி எடுக்கப்பட்ட முடிவின்படி எதுவுமே நடக்காது தவறாது இடம்பெற்றன. குடாநாடு இந்திய இராணுவத்தின் குண்டு மழையாலும் வேட்டு மழையாலும் நனைந்து பிளந்த நாள்கள் இவை. இலட்சோப லட்சம் மக்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைக்குள் தன்னை இந்திய இராணுவத்தின் 'விருந்தினராக' தடுத்து வைத்திருந்த வேளையில், அதன் தளபதி பிரிகேடியர் மஞ்சித் சிங்கிடமும், தினசரி தன்னைச் சந்தித்த கப்டன் சுரேஷிடமும் நான் கேட்ட ஒரேயொரு கேள்வி, "ஏன் முரசொலி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது?" என்பதுவே. எவருமே இதற்கான பதிலை இதுவரை கூறவில்லை.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடெனக் கூறப்படும் இந்தியாவும், உலகின் நான்காவது பெரிய இராணுவம் எனக் கூறிக் கொள்ளும் அந்நாட்டு இராணுவமும் தமிழர் தாயகத்தில் தங்கள் வரம்பு மீற எல்லை கடந்து ஊடக சுதந்திரத்தை அராஜகக் கரங்களால் முறித்த சம்பவங்களுக்கு இதுவரை உரிமை கோரவுமில்லை, அதற்கான நஷ்ட ஈடு வழங்கவுமில்லை எனவும் முரசொலிப் பத்திரிகையின் ஸ்தாபகரும் முதன்மை ஆசிரியராகவுமிருந்த எஸ். திருச்செல்வம் எழுதிய கட்டுரை ஒன்றில் பதிவிட்டுள்ளார்.

### ஈழமுரசு, முரசொலி ஆசிரியர்கள் இந்தியச் சிறையில்

இந்தியச் சிறையில் விடுதலைப் புலிகள் என சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்களுடன், ஈழமுரசு, முரசொலி பத்திரிகையின் ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டனர்.

முக்கியமான வேதனைக்கு உரிய ஒரு விடயம் என்னவென்றால் இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்ட 'பூசா' தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பலரும் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டது, மட்டுமல்லாது பல கஷ்டங்களையும் சந்தித்தனர் என்பதை நேரில் பார்த்த பல வேதனையை 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' எனும் நூல் விவரிக்கின்றது. இலங்கை தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரம் அவர்களது எதிர் நோக்கும் உண்மையானப் பிரச்சினைகளை, வாழ்வியல் நிலைப்பாட்டு உண்மை களை வெளிக் கொணர்வதில் பாரிய ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ் ஊடகங்களின் செய்தி சேகரிப்புக்கு ஊடக முடக்கம் இன்னமும் தொடர்கின்ற இவ்வேளையில், அரசுக்குச் சார்பான, உண்மைகளை மறைக்கும் மறிதலிக்கும் ஊடகங்களுக்கோ முழு சுதந்திரம் கிடைத்துள்ளது.

போர்க் காலத்தில் அரச ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரின் ஆயுத முனையில், அப்பப்போது சில செய்திகளை தமிழ் மக்கள் வாயாலேயே சொல்ல வைத்து, அவற்றைக் காட்சிப் படுத்தி உண்மைக்கு மாறான பொய் பரப்புரைகளை மேற்கொண்டும் வந்தனர். தமிழ்ப் பகுதியில் தனிநபர் துஷ்பிரயோகம், படுகொலை, சித்திரவதை, பாலியல் வன்முறை என்று எவ்வளவு பல இன்னல்களை அனுபவித்திருக்கிறது.

ஆனால் அந்தப் போர்க் கால கட்டத்திலும், அதற்குப் பின்னான காலப் பகுதியிலும் இந்தத் துன்பியல் வரலாறுகள் முறையாகப் பதியப்படவில்லை என்பது வருத்தற்கு உரியதாகும்.

### ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம்

1987 ஒக்ரோபர் 10 ஆம் நாள் இந்தியா ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான தனது யுத்தத்தை ஆரம்பித்துவிட்டது என்று தெரிவித்து, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜீ. ஆருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். இந்தச் செய்தி கூட வெளி உலகுக்குத் தெரிய விடாமல் இந்தியப் படைகளால் நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி போன்ற ஊடகங்கள் தகர்த்து அழிக்கப்பட்டன.

தமிழ் மக்களின் எந்தக் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் வெளியுலகம் அறிய முடியாதவாறு ஊடக முடக்கம் இந்தியப் படைகளால் தொடர்ந்தது. இது உண்மைகளை அறிவிக்கும் ஊடகங்களின் ஊடகச் சுதந்திரம் அற்ற நிலையை உருவாக்கியது.

அப்பாவித் தமிழ் மக்கள் வாய் பேசா ஊமைகளாக மௌனிகளாக இந்தியப் படைகளின் போர்க் காலத்தில் வாழத் தலைப்பட்டனர். இராணுவ இயந்திரத்தின் கட்டுப் பாட்டில் தமிழ் மக்களின் குரல் எப்படி வெளிவரும்? அவர்களின் அபிலாசைகள் எங்கேயும் எப்பொழுதும் வெளிவராமல் தடுக்கப்பட்டன.

ஆயினும் வியட்நாம் போரின்போது 1974 ஆம் ஆண்டு போர்க் களத்தில், பாஃன் தி கிம் என்ற வியட்நாம் சிறுமி ஒருத்தி உடலில் தீக்காயங்களோடு நிர்வாணமாக ஓடி வரும் அந்த ஒரு காட்சி உலகையே உறைய வைத்தது. அந்தப் படம் போருக்கு எதிராக மக்களை ஒன்று திரட்ட பேருதவி செய்தது. அதனை செய்ததும் இதேபோன்ற ஊடகங்கள்தான்.

இதற்கு ஒப்பாகவே ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது நிகழ்த்திய நீண்ட துன்பியல் வன்முறைக் களத்தை விவரிக்கும் சாட்சியமாக, மிக முக்கியமானதொரு ஆவணமாக உள்ளது.

# இயற்கை வளம் அபிவிருத்தி எனும் பெயரில் சுரண்டப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன!

## அனுமதிக்க முடியாது என்கிறார் மன்னார் மறைமாவட்ட ஆயர்



(மன்னார் நிருபர்)

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் ஹறித்தாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இன்று திங்கட்கிழமை (09) முற்பகல் 11 மணியளவில் மன்னார் வாழ்வுதயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

ஹறித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனமானது 'இயற்கை வளங்களை பாதுகாப்போம்' எனும் திட்டத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்தி வருகின்றது.

இக்காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தின் இயற்கை வள சுரண்டல்கள், இயற்கை வள அழிப்புகள் பல அதிகாரிகளின் கவனத்துக்கும் துரித செயற்பாடுகளுக்கும் கொண்டுவரப்பட்டது. மக்களுக்கு இதுபற்றித் தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் உள்ளது. இதனை உணர்ந்த படியால் இந்த ஊடகச் சந்திப்பானது உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது.

இந்தப் பூமியானது நாம் அனைவரும் வாழ்வதற்கான பொது இல்லம். ஆகவே நாம் எமது முன்னோரிடமிருந்து எவ்வாறு வளத்தோடும் செழிப்போடும் இந்த இயற்கை வளங்களைப் பெற்றுக் கொண்டோமோ அவ்வாறு நமது நாளைய தலை முறையிடம் கையளிக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உள்ளது. இதனால் குறிப்பிட்ட நபர்கள் இதை அபகரிப்பதும், அழிப்பதும் குற்றமாகும்.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தலான முக்கிய விடயங்களை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கனியவள அகழ்வு, காற்றாலை திட்டம், சட்டவிரோத மண் அகழ்வு இந்திய இழுவைப் படகுகளில் அத்து மீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு,வனவிலங்குகள் சரணாலயத்துக்குச் சொந்தமான காணிகள் தனி நபர்களால் அபகரிக்கப்படுதல் என்பனவாகும்.

இவற்றால் நாம் எதிர்நோக்கும் பாரிய விளைவுகள், பேரழிவுகள் பற்றி மக்கள் தெளிவடைய வேண்டும். சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு வினையமாக கேட்டுக் கொள்கிறோம். அதேவேளை, தொண்டு நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும், இயற்கைவள பாதுகாப்பு செயற்பாட்டாளர்களும், இயற்கைவள சட்டவாளர்களும், பொதுமக்களும் இணைந்து செயலாற்றுவதற்கு அழைப்பு விடுக்கிறோம்.

இயற்கையைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எமது முழுமையான ஒத்துழைப்பு இருக்குமென கூறிக்கொள்கிறோம். – என தெரிவித்தார்.

இதன்போது மன்னார் ஹறித்தாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில்–

சர்வதேச சமூகம் இயற்கையைப் பாதுகாப்பது மற்றும் காலநிலை மாற்றங்களை நிர்வகிப்பது குறித்து தனது தீவிர அக்கறையைக் காட்டும் இக்காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் அவசியம்.

இதனை உணர்ந்து செடேக் நிறுவனமானது மிசறியோ நிதியுதவியைப் பெற்று மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிதியுதவியை 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக வழங்கியிருந்தது.

இதன் அடிப்படையில் ஹறித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனம் 'இயற்கை வளங்களை பாதுகாப்போம்' எனும் திட்டத்தை மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், வனஜீவராசிகள் திணைக்களம், சுற்றுச்சூழல் அதிகார சபை, நகர சபை, வனவள திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒன்பது கிராமங்களில் (கீரி, சவுத் பார், காத்தான் குளம், பாலப்பெருமாள்கட்டு, முசலி வேப்பங்குளம், மடுக்கரை, தம்பனைக் குளம், பன்னவெட்டுவான், மடுறோட்) நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் முக்கிய செயற்பாடுகளாக, இயற்கை வளங்களை பாதுகாக்கும் முயற்சிகளில் சமூகத்தின் பங்கேற்பையும், ஈடுபாட்டையும், நிலைத்த தன்மையையும் உறுதி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு இலக்கு கிராமங்களிலும் சிறுவர், இளையோர், வளர்ந்தோர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மரம்நடுகை, மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள், சுற்றுச்சூழல் துப்பரவுப் பணிகள், கழிவு முகாமைத்துவ பயிற்சிகள், இயற்கைப் பசளை தயாரிப்பு, பாரம்பரிய விதை உற்பத்தி, இயற்கை வள களப் பயணங்கள், ஊடகப்பயன்பாடு, குடிநீர் கிணறுகள் புனரமைப்பு, மாணவர்களுக்கான சுத்திகரிப்பு நீர் வழங்கல், பாடசாலை மட்டத்திலான சுகாதார நடவடிக்கைகள், இயற்கை மேம்பாட்டு சித்திரப் போட்டிகள், வனஜீவராசிகள் பாதுகாப்பு பதாதைகள் எனப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டும் தொடரப்படும் இயற்கைவள செயற்றிட்டங்களுக்கு அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பையும், மக்களின் முழுமையான பங்களிப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.– என்றார்.



# ஆசிரியர் ஓய்வு அறை கையளிப்பு!

(பழுவூரான்)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்லடி சிவாநந்தா வித்தியாலய பழைய மாணவர்களது நிதிப் பங்களிப்புடன் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருத்தியமைக்கப்பட்ட ஆசிரியர் ஓய்வு அறை கையளிக்கப்பட்டுள்ளது.

அதிபர் த. தயாபரன் மற்றும் பிரதி அதிபர் க. சுவர்ணேஸ்வரன் , ஆசிரியர் தி. தயாபரன் ஆகியோரின் வழிகாட்டலுடன் கல்லடி சிவாநந்தா தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை திருத்தப்பட்டது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா மகராஜால் வெள்ளிக்கிழமை (06) இது திறந்து வைக்கப்பட்டது.





# மண்முனை தென்மேற்கு சிறுவர், முதியோர் நிகழ்வு

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் பிர தேச செயலாளர் திருமதி. தட்சணா கௌரி தினேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னர்களான பிரதேச செயலக எல்லைக் குட்பட்ட சிறுவர்கள் மற்றும் முதியோர்கள் மாலைகள் அணிவித்து கௌர விக்கப்பட்டனர்.

நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் விளையாட்டுகளும் முதியவர்களின் கலை நிகழ்வுகளும் விளையாட்டுகளும் இடம் பெற்றன.

# காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி தனித் தீர்மானம்



தமிழக விவசாயத்துக்கு அடித்தளமாக விளங்கும், காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழகத்துக்கு தண்ணீரை திறந்துவிடு மாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.

சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. அவை மரபுப்படி, காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்கியதும், மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

வினாக்கள் விடைகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்தனர். 2023-2024 ஆம் நிதியாண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

பின்னர், தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிடக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றுகையில், தமிழகத்தின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய, காவிரி நதிநீர் உரிமையைக் காக்கும் கடமையை நோக்கிய நமது சிந்தனையை, எண ணத்தை இன்னும் சொன்னால் கட்டளையை இடக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இது அமைந்திருக்கிறது.

ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், காவிரி நதி நீர் உரிமையைக் காப்பதில், தி.மு.க. என்றும் எப்போதும் எந்த சூழலிலும் உறுதியாக இருக்கும் என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்துக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

கர்நாடக மாநில அரசு நமக்கு வழங்கவேண்டிய, உரிய தண்ணீரை இந்த மாதத்தில் திறந்துவிடவில்லை. இதுதொடர்பாக எடுத்த முயற்சிகளை, விரிவாக சொல்ல வேண்டியதை நான் எனது கடமையாக கருதுகிறேன்.

தமிழக விவசாயத்துக்கு அடித்தளமாக விளங்கும், காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட, உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, தமிழகத்துக்கு தண்ணீரை திறந்துவிடு மாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை இப்பேரவை ஒருமனதாக

# நாட்டு வெடி தயாரிப்பு கடையில் தீ விபத்து: நால்வர் உயிரிழப்பு, 5 பேர் படுபடுகாயம்

அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகே நாட்டு வெடி தயாரிப்பு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

அரியலூர் மாவட்டம் திருமானூர் அடுத்த வெ.விரகாலூர் கிராமத்தில் திருமழபாடி கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவருக்கு சொந்தமான நாட்டு வெடி தயாரிப்பு கடை கடந்த 10 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு தீபாவளியையொட்டி நாட்டு வெடிகள் தயாரிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்துள்ளது.

இந்த கடையில் அந்த பகுதியை சேர்ந்த 30 இற்கும் மேற்பட்டோர் வெடி தயாரிப்பு பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.



இந்த நிலையில், இன்று காலை 9 மணியளவில் இந்த வெடி தயாரிப்பு கடையில் உராய்வு காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ந்து வெடிகள் வெடித்துள்ளன. இந்த நிலையில், 10 பேர் அங்கிருந்து தப்பித்து வெளியேறியுள்ளனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த 3 பேரை அந்த பகுதி மக்கள் மீட்டு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். தீ பரவல் காரணமாக விபத்து நடத்த பகுதியில் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது .

விபத்து இடம்பெற்ற பகுதி 4 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

# ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல்: இசைவிழாவில் பங்கேற்ற 260 பேர் பலி!



காசா அருகே இஸ்ரேலிய பகுதியில் நடைபெற்ற இசை விழாவில் பங்கேற்ற 260 பேரின் சடலங்கள் மீட்டுள்ளன என இஸ்ரேலின் மீட்பு பிரிவான ஷாகா தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் கடந்த சனிக்கிழமை காலை 8 மணி தொடங்கி 2 மணி நேரத்தில் பல பகுதிகளிலும் ஏவுகணைகள் துளைத்தெடுத்தன. சற்றும் எதிர்பாராத ஹமாஸ் பயங்கரவாதிகளின் இந்தத் தாக்குதலால் இஸ்ரேல் மக்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகினர்.

அத்துடன், ஹமாஸ் பயங்கரவாதிகள் பலரும் இஸ்ரேலுக்குள் நுழைந்தனர். மோட்டார் சைக்கிள்கள், கார்கள், பேராக்ளைடர்கள் எனப் பலவாறாக இஸ்ரேலுக்குள் ஹமாஸ் பயங்கரவாதி கள் நுழைந்து செல்லும் வழிகளெல்லாம் தாக்குதல் நடத்தினர்.

ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேல் நகருக்குள் நுழைந்தது மட்டுமல்லாது, கண்ணில்பட்ட பொதுமக்களையெல்லாம் சுட்டுக் கொல்லும் காட்சிகள் வெளியாகி பெரும் அதிர்வலையை ஏற்படுத்தின.

இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் இராணுவம் துரிதமான பதில் தாக்குதலில் ஈடுபட்டது. பாலஸ்தீனத்தின் ஹமாஸ் நிலைகளை நோக்கி வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதல் காரணமாக, ஹமாஸ் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், பாலஸ்தீனத்தின் காசா நகரில் 426 இடங்களில் இஸ்ரேல் விமானப் படை நடத்திய பதில் தாக்குதலில் பல அடுக்குமாடி கட்டங்கள் தரைமட்டமாகின. 313 பேர் உயிரிழந்தனர். 1,800 பேர் காயம் அடைந்தனர்.

இஸ்ரேலின் பதிலடி தாக்குதலால், காசா எல்லை பகுதிக்கு அருகே வசிக்கும் பாலஸ்தீனர்கள் 20 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி, தொலைதூர பகுதிகளுக்கு சென்று, ஐ.நா. பாடசாலைகளில் தஞ்சம் அடைந் தனர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், இஸ்ரேல் பாதுகாப்பு படைகளின் முழு பலத்தையும் பயன்படுத்தி, காசா நகரில் ஹமாஸ் தீவிரவாதிகள் செயல்படும் அனைத்து இடங்களையும் அழிப்போம். இந்த போர் நீண்ட காலம் இடம்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 40 மணிநேரம் கடந்த நிலையில், இன்று காலையிலும் இஸ்ரேல் படையினர் தீவிரவாதிகளுடன் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 700 பேர் கொல்லப்பட்டுள்ளனர். காசா பகுதியில் 400 பேர் கொல்லப் பட்டுள்ளனர். மொத்தமாக இரண்டு தரப்பிலும் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1100-ஐ கடந்துள்ளது.

இதனிடையே காசா பகுதியிலிருந்து 70 ஆயிரம் பாலஸ்தீனர்கள் வெளியேறி தாங்கள் நடத்தும் பாடசாலைகளில் தஞ்சமைடந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது. மேலும் காசா பகுதிகளுக்கு உணவு பொருள்கள் கொண்டு செல்ல மனிதா பிமான வழித்தடங்களை உருவக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் காசா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இருந்து 30 பேர் தப்பிப் பிழைத்துள்ளனர் என இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்த இசைநிகழ்ச்சி இடம்பெற்ற இடத்தில் 260 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதுகுறித்து சமூக வலைதளங்களில் வெளியான வீடியோ ஒன்றில், துப்பாக்கிச் சூட்டுக்கு நடுவில் இசைநிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் திறந்த வெளியில் ஓடுவது போன்ற கட்சி வெளியாகியுள்ளது.

## ‘ஐ.எஸ், அல் ஹைதா போன்றது ஹமாஸ்’

பயங்கரவாத அமைப்புகளான ஐ.எஸ். ஐ.எஸ், அல் ஹைதா போன்றது ஹமாஸ் அமைப்பு என்று ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன் தெரிவித்துள்ளார்.



ஐ.நா. தலைமையகத்தில் உரையாற்றிய ஐநாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட்எர்டன், இன அழிப்பை மேற்கொள்ளும் பயங்கரவாத அமைப்பு ஹமாஸ். இன அழிப்பை மேற்கொள்ள அவர்களுக்கு காரணம் ஏதும் தேவையில்லை. பேச்சுக்கு அவர்கள் வர மாட்டார்கள். யூதர்களை அழிப்பது மட்டுமே அவர்களின் ஒற்றைக் குறிக்கோள். முஸ்லிம்கள் யூதர்களை கொல்லாத வரை இறுதி தீர்ப்பு நாள் என்பது வராது. யூதர்களை பார்த்தால் அவர்களை முஸ்லிம்கள் கொல்ல வேண்டும் என ஹமாஸ் அமைப்பின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு யூதர் உயிரோடு இருக்கும் வரை அவர்கள் யுத்தத்தை நிறுத்த மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.